RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22451

OPEN ACCESS

# ஆ. மாதவன் கதைகளில் சமூகச் சிக்கல்கள்

சோ. சித்ரா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை அறிவியல் கல்லூரி, கொழிஞ்சாம்பாறை, பாலக்காடு, கேரளா- 678554, இந்தியா

# Social issues in A. Madhavan's Stories

S. Chithra [a, *]

[a] Department of Tamil, Government Arts and Science College, Kozhinjampara, Nattukal, Palakkad-678554, Kerala, India

* Corresponding Author: chitras@gmail.com

Received: 04-07-2022
Revised: 30-09-2022
Accepted: 07-10-2022
Published: 19-10-2022

Check for updates

**ABSTRACT**

It is said that literature is a mirror that reflects human life. They attempt to guide and guide human life by pointing to the social situation by reflecting the society in which man lives. A. Madhavan is a native of Nanjil nadu. He is now a tamil writer living in Thiruvananthapuram. He used to trade in 'Salai', a commercial street in the heart of Thiruvananthapuram, and based on the experiences and characters he encountered in his daily business life, he has created stories in a Tamil style mixed with Malayalam. Thus, the social problems that A. Madhavan expresses in his stories are examined in detail here.

**Keywords:** Madhavan, Tamil writer, Social problems, Stories

## முன்னுரை

இலக்கியம் என்பது மனித வாழ்வைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி என்று கூறுவர். மனிதன் வாழும் சமுதாயத்தை பிரதிபலிப்பதன் மூலம் சமுதாய நிலமையை சுட்டிக்காட்டி மனித வாழ்வை வழிநடத்தவும், வழிகாட்டவும் அவ்விலக்கியங்கள் முயற்சி செய்கின்றன எனலாம். அவ்வகையில் ஆ.மாதவன், தம் கதைகளில் வெளிப்படுத்தும் சமூகச் சிக்கல்கள் பற்றி இங்கு விரிவாக ஆய்வு செய்யப்படுகிறது.

ஆ.மாதவன். நாஞ்சில் நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவர். தற்போது திருவனந்தபுரத்தில் வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்றிய எழுத்தாளர் இவர். திருவனந்தபுரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள ‘சாலை’ எனும் வணிகத் தெருவில் வாணிகம் செய்து வந்த இவர், அன்றாட வணிக வாழ்வில் தாம் சந்தித்த அனுபவங்களையும், பாத்திரங்களையும் கருவாகக் கொண்டு, மலையாளம் கலந்த தமிழ் நடையில் கதைகளைப் படைத்துள்ளார். இவர் இதுவரையில் 3 நாவல்களையும், 4 குறுநாவல்களையும், 61 சிறுகதைகளையும் எழுதியுள்ளாரி. நாவல்கள்: புனலும் மணலும் (1974), கிருஷ்ணப்பருந்து (1980), தூவானம் (1987) குறுநாவல்கள் : எட்டாவது நாள், காளை, பாவத்தின் சம்பளம், ஆனைச்சந்தம் சிறுகதைத் தொகுப்புக்கள்: கடைத்தெருக் கதைகள் (1975), மோகபல்லவி(1975), காமினி மூலம் (1978), ஆனைச்சந்தம், மாதவன் கதைகள், அரேபியக் குதிரை. இவரது பல படைப்புகள் ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மலையாள மொழிப்புலமையும் பெற்ற ஆ.மாதவன், பிரபல மலையாள எழுத்தாளர்களின் சில படைப்புக்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் கோவையில் அமைக்கப்பட்டுள்ள ‘விஷ்ணுபுரம்’ இலக்கிய அமைப்பின் முதல் விருதான

‘விஷ்ணுபுரம் இலக்கிய விருது’ இவருக்கு 2010இல் வழங்கப்பட்டது. 2015ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருதினையும் பெற்றுள்ளார்.

## சமூகமும் இலக்கியமும்

ஆதிமனிதன் காடுமேடுகளில் தனித்தனியாக அலைந்து திரிந்து விலங்குகளோடு விலங்காய் வாழ்ந்த நிலை மாறி, அனைவரும் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து ஓரிடத்தில் தங்கி வாழத் தலைப்பட்டபோதே சமூகம் எனும் கோட்பாடு உருவாயிற்று எனலாம். “தனிமனிதன் தன்னிறைவு பெறவேண்டிப் பிறரைச் சார்ந்தும், இணைந்தும், ஒன்றியும் வாழ நேரிட்டபோது சமூகக் கூட்டமைப்பு தோன்றியது என்கிறார் பிளேட்டோ எனும் கிரேக்க அறிஞர்” (Ramesh, 1973).

எழுத்தாளன் சமுதாயத்தின் ஓர் அங்கமாகிறான். தான் வாழும் சமூகத்தில் நிகழும் சம்பவங்கள் அவனுள் உந்துதலை ஏற்படுத்தி அவனை எழுதத் தூண்டுகின்றன. “கதைக்குரிய மூலப்பொருளைப் பற்றி எப்போதும் எனக்குப் பஞ்சமில்லை. சமுதாயத்து மனிதனாகச் சுற்றியுள்ள மக்களின் வாழ்கையில் மனதைப் பறிகொடுக்கும் இயல்பினனாக இருப்பதால், அந்த வாழ்கையோடு ஒன்றிய மூலப்பொருளை வேறு எங்கோ தேடி அலைவதில்லை. இந்த உலகமே எனக்கொரு கதை சொல்லும் களம்” என்கிறார் அகிலன் (Akilan, 1992). சமூகத்தில் நிகழும் தீமைகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் சமூகத்தின் தவறுகள் திருத்தப்படவும், மேன்மையான சமூகவாழ்விற்கு வழிகாட்டவும் எழுத்தாளன் முயல்கிறான். இதுவே இலக்கியத்தின் நோக்கமாக அமைகிறது. “இலக்கியம் என்பது வாழ்வைப் பற்றியும், அதன் குறைகளைப் பற்றியும் எதிர்காலத்தில் அமைக்க வேண்டிய செம்மையான பாதையைப் பற்றியும் சுட்டிக்காட்டிச் செல்வது. நல்ல இலக்கியம் சமுதாய நோயையும், நோய் முதலையும், அது தணிக்கப்படுகிற வழியினையும் அறிவுறுத்துகிற மருத்துவனே” எனும் கூற்று இலக்கியத்தின் பயனை எடுத்துரைக்கிறது. அவ்வகையில், ஆ.மாதவன், தம் படைப்புக்களில் எத்தகைய சமூக விமர்சனங்களை முன்வைக்கின்றார் என்பது குறித்து இங்கு விவாதிக்கப்படுகிறது.

## ஆ. மாதவன் கதைகளில் சமுதாயச் சிக்கல்கள்

ஆ.மாதவன் தம் கதைகளில் வெளிக்காட்டும் சமுதாயச் சிக்கல்களைக் கீழ்க்காணும் தலைப்புக்களில் வகைப்படுத்திக் காணலாம். அவை, 1. பொருளாதார அடிப்படையில் ஏற்படும் சிக்கல்கள், 2. சமூக எதிரி நடத்தைகள், 3. சமூக அலட்சியத்தின் தீமைகள், 4. பழமைக்கும் புதுமைக்கும் இடையேயான போராட்டம் என்பனவாகும்.

## பொருளாதார அடிப்படையில் ஏற்படும் சிக்கல்கள்

மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளில் பொருளாதாரம் முக்கியப் பங்கு வகிக்கிறது. ‘பணம் இல்லாதவன் பிணம்’ என்று சொல்லுமளவுக்கு பணத்தின் தேவை இன்றியமையாததாக இருக்கிறது. அடிப்படைத் தேவைக்குக் கூட பணம் இல்லாத நிலை ஏற்படும்போது அங்கு ஏராளமான சிக்கல்கள் உருவாகின்றன. மாதவன் தம் கதைகளில் பொருளாதார அடிப்படையில் ஏற்படும் சிக்கல்களாகப் பெண்கள் நெறிபிறழ்தல், தவறு செய்யத் தூண்டப்படுதல், சுரண்டலுக்கு ஆளாதல், உறவுகள் மதிப்பிழத்தல் போன்றவற்றைக் குறிப்பிடுகிறார். குடும்ப பாரத்தைச் சுமக்க நேரும் பெண்கள் அதற்கான பொருளாதாரத்தை அடையும் நோக்கில் தம் ஒழுக்க நெறியைத் தவறவிடவும் துணிகின்றனர். பொருளாதாரப் பற்றாக்குறையால் ஒழுக்கம், கற்பு போன்றவை மதிப்பிழந்து போவதை ‘மோகபல்லவி’, ‘அழுகை’ போன்ற கதைகளில் ஆசிரியர் காட்டுகிறாரி. பொருளாதாரச் சிக்கல்தான் பெண்களின் இத்தகைய நெறிபிறழ்ந்த வாழ்வுக்குக் காரணமாக அமைவதாகக் காட்டுகிறார் (Maadhavan, 2016).

பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்க தவறான எந்தச் செயலையும் மனிதர்கள் செய்யத் துணிவதை ‘பறிமுதல்’ ‘தூக்கம் வரவில்லை’ போன்ற கதைகளில் ஆசிரியர் காட்டுகிறார். ‘பறிமுதல்’ கதையில் வரும் அப்புக்குட்டன் அன்றாட வாழ்வுக்கான பணத்தைப் பிறரை ஏமாற்றிப் பெறுகிறான். ‘தூக்கம் வரவில்லை’ கதையில் வரும் மாடசாமி, பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்க முடியாமல் பெற்ற

தாயையே கொல்லத் துணிபவனாகக் காட்டப்படுகிறான். தன் வறுமைநிலையில் தான் செய்தது சரியே என அவன் தன்னைத் தானே சமாதானம் செய்துகொள்கிறான். தவறென்று உணர்ந்தேதான் இவர்கள் அதைச் செய்கின்றனர்.

பொருளாதாரப் பற்றாக்குறையால் வாடுபவர்களை பணம் படைத்தவர்கள் தங்கள் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்வதை 'அழுகை', 'ஈடு' போன்ற கதைகளில் ஆசிரியர் காட்டுகிறார். 'ஈடு' கதையில் வரும் மாடசாமி, தன் மகனின் எதிர்பாராத இறப்பிற்கு அரசாங்கம் கொடுத்த பணத்தில் அலுவலர்களுக்கும், நண்பர்களுக்கும் லஞ்சம் கொடுத்ததுபோக, சொற்ப பணமே அவன் கையில் மிஞ்சுகிறது. அந்தப் பணத்தில் எதுவும் செய்யமுடியாத வேதனையில் அதைக் குடித்துத் தீர்க்கிறான். இங்கு ஒரு உயிரின் இழப்புக்காகக் கொடுக்கப்படும் பணத்தைக் கூடப் பிடுங்கப் போராடும் சுரண்டல்வாதிகளை ஆசிரியர் காட்டுகிறார் (Maadhavan, 2016).

'பசி வந்தால் பத்தும் பறந்துபோகும்' என்பது பழமொழி. பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படும்போது மனிதன் தன்னை மட்டுமின்றி தன் உறவுகளையும் மறந்து போகிறான். "தூக்கம் வரவில்லை" கதையில் வரும் மாடசாமி தன் வறுமை நிலையைச் சமாளிக்க வழியின்றி, தன்னை பெற்ற தாயையே கொல்கிறான். "ஈடு" கதையில் வரும் மாடசாமி, தன் மகனின் எதிர்பாராத இழப்பில் வாடுகிறான். மகனின் இழப்புக்காக அரசாங்கத்தில் நஷ்ட ஈடு கிடைப்பது அறிந்து, அதைப் பெறப் போராடுகிறான். கணவனிடம் சண்டையிட்ட அவன் மனைவிகூட இறுதியில், "எங்கே பணத்தை எடுங்க... என் மகன காலனுக்குக் கொடுத்த பணம், எத்தனை பணம் கெடச்சிதுன்னு நானும் பாக்கட்டும்?" என்று கேட்கிறாள். பணத்தின் தேவைக்கு முன்னால் உறவுகளெல்லாம் மதிப்பிழந்து போவதை இக்கதைகளில் ஆசிரியர் காட்டுகிறார் (Maadhavan, 2016).

## சமூக எதிர் நடத்தைகள்

"சமுதாயம் என்பது மக்கள் சேர்ந்து வாழ்வதை மட்டும் குறிப்பதன்று. தனிமனிதர்கள் ஓர் ஒழுங்கின் அடிப்படையில் சேர்ந்துள்ள அமைப்பு முறையையும் குறிக்கின்றது என்கிறார் ஏங்கல்ஸ்". அவ்வாறு ஒன்றுபட்ட சிந்தனையின்றி சிலர் மாறி நடக்க முற்படும்போது அந்த சமூகக் கட்டுப்பாட்டில் பிரச்னைகள் எழுகின்றன. இவை 'சமூக எதிர் சிந்தனைகள்' அல்லது 'எதிர் நடத்தைகள்' எனப்படுகின்றன. மாதவன் கதைகளில் சமூக மதிப்புக்களில் மாற்றம், சக மனித உணர்வுகளைப் புரிந்துகொள்ள மறுத்தல், குற்றங்கள் புரிவதில் தயக்கமின்மை போன்ற சமூக எதிர் நடத்தைகள் காட்டப்படுகின்றன. பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்கும் நோக்கில் பெண்கள் தங்கள் கற்பை இழக்கத் துணிவதை 'அழுகை', 'மோகபல்லவி' போன்ற கதைகளில் காண்கிறோம். 'அழுகை' கதையில் வரும் சாரதா குடும்ப வறுமையைப் போக்க வேலை செய்கிறாள். அந்த வேலையில் அவள் கற்பை இழக்கத் தயாரானபோது அவளுக்கு அதிக சம்பளம் கிடைப்பதால் அவள் அதை தவறாக எண்ணவில்லை. கற்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதும், கற்பிழந்த பெண்கள் சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்படுவதும் சமூக மரபுகளாகும். அந்த மரபுகளுக்கு மதிப்பளிக்காமல் அவர்கள் வாழ்வதாகக் காட்டப்பட்டுள்ளனர் (Maadhavan, 2016).

திருமணம் எனும் பந்தம் எதுவுமின்றி ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்க்கை நடத்துவதை 'பல்லவி', 'ராஜா தெரு' போன்ற கதைகளில் காண்கிறோம். 'பல்லவி' கதையில் கணவனை இழந்த பிருங்கா, அவளை விட வயதில் குறைந்த வேதாவின் ஆசையை ஏற்று, திருமணம் முடிக்காமலே அவனுடன் சேர்ந்து வாழ்கிறாள். 'ராஜா தெரு' கதையில் வரும் ஜானகி, தன் கணவனை விட்டுவிட்டு வேறு ஒரு வாலிபனுடன் திருமணம் செய்யாமலேயே கணவன் மனைவியாக வாழ்கின்றனர். குடும்பவாழ்க்கைக்கு திருமண பந்தம் அவசியம் என்பதும், ஒத்த வயதுடையவர்கள் திருமணம் செய்யவேண்டும் என்பதும் இங்கு மீறப்படுகின்றன. இக் கதைகளில் பெண்களின் பாதுகாப்புத் தேடலும், காம உணர்வுமே இத்தகைய நெறிபிழந்த வாழ்வை நாட தூண்டுகின்றன.

இல்லற வாழ்வில் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்பதே நமது பண்பாடாகும். 'மோகபல்லவி', 'பொய்யாய் கனவாய்', 'பூனை' போன்ற கதைகளில் மனைவிக்குத் தெரியாமல் வேறு பெண்கள் மேல் மோகம் கொண்டு தவிக்கும் கணவர்களைக் காட்டியுள்ளார். 'பறக்க வேண்டும் என்ற ஆசை', 'திருட்டு'

போன்ற கதைகளில் கணவனுக்குத் தெரியாமல் பிற ஆடவருடன் உறவு கொள்ளும் குடும்பத்தலைவிகள் காண்பிக்கப்படுகின்றனர். 'மாதவி' கதையில் கணவனுக்குத் தெரியாமல் மனைவியும், மனைவிக்குத் தெரியாமல் கணவனும் வெவ்வேறு நபர்களுடன் கள்ள உறவு வைத்திருக்கின்றனர். கணவன் மனைவி கூடிவாழும் இல்லற வாழ்வில் ஒருவருக்கொருவர் ஏமாற்றிக் கொண்டு வாழும் போலித்தனமான இல்லறவாழ்க்கை இங்கு காட்டப்படுகிறது. இதில் ஆண்களும், பெண்களும் சரிசமமாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதைத் தவறு என்றே தெரிந்து அவர்கள் செய்வதால் இது பற்றிய வருத்தமோ, பயமோ அவர்களிடம் இல்லை.

"குற்ற நடத்தை என்பது சமூகம் ஒத்துக்கொள்ளாது மறுக்கின்ற செயல்களை ஒருவன் செய்வது ஆகும்". ஒரு தனிமனிதன் இக்குற்றங்களைச் செய்வது மூலம் முழுச் சமூகமும் பாதிக்கப்படுகிறது. மனித சமூகத்தில் குற்றங்கள் தோன்றுவதற்கு மனிதனது வாழ்வியல் சூழ்நிலையும், பேராசையும் காரணங்களாக அமைகின்றன. ஆ.மாதவன் கதைகளில் காணும் மனிதர்கள் சுயநலத்திற்காக தவறு செய்வதில் விருப்பமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். மாதவன் கதைகளில் சித்தரிக்கப்படும் குற்ற நடத்தைகளாவன, கொலை செய்தல், ஏமாற்றுதல் என்பனவாகும். 'சினிமா', 'காமினி மூலம்', 'தூக்கம் வரவில்லை' ஆகிய கதைகளில் தம் சுயநலத்திற்காக கொலை செய்வதை வெகு சாதாரண நிகழ்வு போல் நடத்திவிட்டு, எதுவும் நடக்காததுபோல இருக்கும் மனிதர்களை ஆசிரியர் காட்டியுள்ளார். தம் நிலையில் இச்செயல் நியாயமானதே என்று சமாதானம் செய்துகொள்கின்றனர். 'பறிமுதல், 'வேஷம்' போன்ற கதைகளில் வரும் நபர்கள் பிறரை ஏமாற்றிப் பணம் பறித்து அதன்மூலம் வாழ்க்கை நடத்துகின்றனர். அதை பெரிய தவறாகவோ, குற்றமாகவோ அவர்கள் கருதவில்லை. 'மோகபல்லவி', 'மாதவி', 'திருட்டு', 'உண்மைக்கதை', 'பூனை', பறக்கவேணடும் என்ற ஆசை' போன்ற கதைகளில் கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் ஏமாற்றிக்கொண்டு அந்நிய நபர்களுடன் கள்ள உறவு வைத்திருக்கின்றனர். அதைப் பெரிய தவறாக எண்ணி அவர்கள் வருந்தவில்லை. பழிபாவத்திற்கு அஞ்சி நேர்மையாய் வாழ முயல்வதும், தவறு நேர்ந்தால் அதைத் திருத்திக் கொள்ள நினைப்பதுமே மனித சமூகத்தின் மரபாகக் கருதப்படுகிறது. அந்த மரபுகளைப் பின்பற்றாமல் தவறு செய்யும் மனிதர்களாக அவர்கள் காட்டப்பட்டுள்ளனர் (Maadhavan, 2016).

## சமூக அலட்சியத்தின் விளைவுகள்

ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்தின் அங்கத்தினன் தான். சமூகச் சீரமைப்பில் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பங்கு உண்டு. இதை உணராமல் மனிதர்கள் அலட்சியமாக இருப்பதாலேயே சமூகத்தில் அநீதிகள் பெருகி வருகின்றன. மாதவன் கதைகளில் இத்தகைய சமூக அலட்சியத்தின் விளைவால் ஏற்படும் விளைவுகளாக, குற்றங்கள் நிகழ வாய்ப்பளித்தல், அனாதைகள் உருவாகக் காரணமாதல் ஆகியவற்றை எடுத்துக் கூறியுள்ளார். 'பண்பாடு' கதையில் ராமநாதனும், சிவசாமியும் நாட்டில் நிலவும் அநீதிகளைப் பற்றிப் பேசி வருந்துகின்றனர். இதைத் தட்டிக் கேட்க யாரும் இல்லையே என ஆதங்கப்படுகின்றனர். அவர்களுடைய கண்ணெதிரிலேயே ஒரு தொழுநோயாளியான பிச்சைக்காரி சில சமூக விரோதிகளால் தாயாக்கப்படுகிறாள். அதைக் கண்டு நண்பர்கள் இருவரும் சமூகத்தைக் குறை கூறி வருத்தப்படுகின்றனர். வாய்ப்பேச்சில் அக்கறை காட்டும் இவர்கள் சிறிது முயன்றிருந்தால் அந்த பிச்சைக்காரியைக் காப்பாற்றியிருக்க முடியும். சமூகத்தில் நிலவும் இவ்வகை அநீதிகள் யாரோ ஒருவருக்கு நடப்பதாக எண்ணி அலட்சியம் காட்டும் இவர்கள், சமூகத்தைக் குறை கூறி தங்களை நல்லவர்கள் போல் காட்டிக் கொள்கின்றனர் (Maadhavan, 2016).

## பழமைக்கும், புதுமைக்கும் இடையே போராட்டம்

அறிவியல் வளர்ச்சியில் உலகம் எவ்வளவுதான் முன்னேறினாலும் சாதி, மதம், சடங்குகள், கட்டுப்பாடுகள் போன்ற பழைய வழக்கங்கள் இன்னும் சமூகத்தில் மாற்றம் அடையாமல் இருக்கின்றன. பழைய வழக்கங்களான அவை புதிய முன்னேற்றங்களை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமின்றி, தடைகளாகவும் நிற்கின்றன. மாதவன் கதைகளில் இதுபோன்ற சில தடைக்கற்களைக் காணமுடிகிறது. அவை, சாதிக் கட்டுப்பாடு, பெண்ணடிமைத்தனம், சடங்குக் கட்டுப்பாடு என்பனவாகும். 'நாலுபேர்'

கதையில் சாதிக் கட்டுப்பாட்டின் கொடுமை விளக்கப்பட்டுள்ளது. 'பூவக்கா' கதையில் பழமையில் ஊறிப்போன மணியக்காரர் மிகவும் கட்டுப்பாடுடன் பெண்பிள்ளைகளை வளர்க்கிறார். தன் மகளை ஒரு பட்டாளக்காரனுக்கு திருமணம் முடித்து வைக்கிறார். அதன்பின் கணவனைப் பிரிந்து தனியாக வாழ்ந்து வரும் மகளின் மனநிலையை சற்றும் உணராதாவராக இருக்கிறார். அதைப்பற்றி வெளியாட்கள் ஏதாவது கேட்கக் கூடாது என்றும், தன் மகள் யாரிடமும் அதுபற்றி பேசக்கூடாது என்றும் கட்டளை விதிக்கிறார். பெண்களை வீட்டிற்குள் அடைத்து வைக்க நினைக்கும் மணியக்காரரின் மனநிலை இங்கு வெளிப்படுகிறது (Maadhavan, 2016).

'நாயனம்' கதையில் வயதான கிழவர் ஒருவர், தன் இறுதிச்சடங்கில் மேளதாளமும், நாயனமும் கண்டிப்பாக இருக்கவேண்டுமென கூறி இறந்து போகிறார். அதை நிறைவேற்றும் முயற்சியில் இறப்புக்கு வந்த மக்களை அலைக்கழிக்கும் விதமாக நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இன்றைய அவசர உலகில் அனைவரையும் துன்புறுத்தும் சடங்கு முறைகள் தேவையற்றது என்பதை உணராமல் பழைய சடங்கு முறைகளைக் கட்டிக்காப்பாற்றித் துன்பமடையும் மக்களை ஆசிரியர் இங்கு காட்டுகிறார்.

## முடிவுரை

சமூகம் என்பது தனிமனிதன், குடும்பம், சமுதாயம் ஆகிய மூவகை அமைப்பின் கூட்டு முயற்சியாகும். இந்த மூவகை அமைப்பிலும் ஒழுங்கும் கட்டுப்பாடும் காப்பாற்றப்படும் வரையில் சமூகத்தில் எந்த சலனங்களும் இல்லை. ஆனால் இவ்வமைப்புக்களில் ஏற்படும் பல்வேறு பிரச்னைகள்தாம் சமூகத்திலும் சிக்கல்களை உருவாக்குகின்றன. இவற்றை வெளிக்காட்டும் விதமாக ஆ.மாதவன் கதைகள் அமைந்துள்ளன.

## References


Akilan, (1992) Puthiya Vilippu, Thagam, Chennai, India

Maadhavan, A. (2016) A.Madhavan Kadhaikal, Natrinai, Chennai, India

Ramesh, S.R. (1973) Samuga Ulaviyal, Tamil Nadu Text Book And Educational Services Corporation, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License